**சீ.டபிள்யூ.ஈ எக்கனமிக் சென்றர்ஸ் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட் - 2017/2018**

சீ.டபிள்யூ.ஈ எக்கனமிக் சென்றர்ஸ் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டடின் ("கம்பனி") 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத் 1 ரளவ நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) குறிப்பு இலக்கம் 2.2.1.2 இன் பிரகாரம் வட்டி வருமானம் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளது. எனினும், வட்டி வருமானமானது நிதிக் கூற்றில் அட்டு அடிப்படையில் அற்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சிறிய மற்றும் நடுத்2ரளவ நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 10.21 ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் தொடர்பான பணிக்கொடை ஏற்பாடு ரூபா. 4,569,340 பெறுமதியானதும் மற்றும் 2015/2016 ஆம் ஆண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா. 221,918 பெறுமதியும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கக் செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிர்வாக செலவினங்களும் மற்றும் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா.4,569,340 பெறுமதியினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது மற்றும் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா. 221,918 பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஊழியர்களின் சேவைக்காலத்தினை அண்ணளவாக மட்டம் தட்டியதன் காரணமாக பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் ரூபா. 1,734,017 பெறுமதியினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) கணக்காய்வின் போது நடைமுறைப் பொறுப்புக்கள் தொடர்பான அட்டவணை, விலைப்பட்டியல் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் காணப்படாதின் காரணமாக ரூபா. 26,123,934 பெறுமதியான நடைமுறைப் பொறுப்புக்கள் சரிபார்க்க முடியவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத் 2 ரளவ நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

அ. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

ஆ. எனது அபிப்பிராயமாவது:

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களைத் தவிர, எனது கணக்காய்விற்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன், எனது பரிசோதனைகளிலிருந்து இது வரை தென்படுகின்றவாறு கம்பனியினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தன.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

### 2.3 கம்பனியின் ஒருங்கிணைப்பு

கம்பனியின் ஸ்தாபிப்பு தொடர்பான அமைச்சரவையின் அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதியளிக்கப்ட்ட பதவியணியினரினை பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பெறவேண்டிய நிலுவைத்தொகையின் கூட்டுமொத்தம் ரூபா. 4,919,594 31 மார்ச் 2018 ஆம் ஆண்டில் 05 வருடங்களுக்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா. 5,613,608 வரிக்கு பின் தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா. 4,981,312 வரிக்கு பின் தேறிய இலாபமொன்றாகக் காணப்பட்டமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா. 10,594,920 ஆன முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. மொத்தச் செலவினம் ரூபா. 50,011,394 பெறுமதியினால் அதிகரித்தமைக்கு எதிராக மொத்த வருமானம் ரூபா.39,245,934 இனால் அதிகரித்தமையே நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக காணப்படுகின்றது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 இன் டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.